**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**
முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**
சார்பு நீதிபதி, ஆரணி,
2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ம் நாள் சனிக்கிழமை
**I.A.No.05/2024 in O.S.No.174/2020**

1. தினேஷ்
2. மைனர் நிர்மல்குமார்,
(2ம் தி மைனர் ஆதலால் அவரது சகோதரரான
1ம் வாதி தினேஷால் எடுத்துரைக்கப்படுகிறார்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. யோகானந்தம்
2. காந்திமதி
3. செல்வம்
4. ஜெயா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 08.07.2025 அன்று இறுதிகாய விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.சந்திரசேகரன்,B.A.,B.L., திரு.R.கணேசன்,B.A.,LL.B., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன்,B.A.,B.L., திரு.M.தமிழ்குடிமகன்,M.Com.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

03.06.1996 தேதியிட்ட ஆவண எண்.65/1996 என்ற அசல் உயில் ஆவணத்தை வாதிகளின் அத்தை சாந்தி என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிடவேண்டும் என்று உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 11விதி 14ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கை 19.08.2005 தேதியிட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று விளம்புகை செய்யவும், சுவாதீன பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்து குறித்து எங்களது தாத்தா பலராம முதலியார் பதிவு

செய்யப்பட்ட 03.06.1996 தேதியிட்ட ஆவண எண்.65/1996 என்ற உயில் ஆவணத்தை ஆரணி சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் எனது தகப்பனாரின் சகோதரி சாந்தி என்பவர் வசம் உள்ளது. அவருக்கும் எங்களுக்கும் விரோதம் உள்ளது. அதனால் உயில் ஆவணத்தை எங்களிடம் தரவில்லை. மேற்படி உயில் ஆவணத்தை நிரூபணம் செய்யவேண்டியது அவசியமாகும், மேற்படி உயில் ஆவணத்தை தாக்கல் செய்து அது குறித்து சாட்சியம் அளிக்க சாந்தி என்பவரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 **<u>எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்/வாதிகள் தரப்பில் அசல் உயில் ஆவணம் 03.06.1996 ஆவண எண்.65/96 என்ற ஆவணம் மனுதாரருடைய அத்தை ஒரு சாந்தி என்பவரிடம் உள்ளதாகவும் அதனை அவர் நீதிமன்றத்தில் ஒப்படைக்ககோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்வதற்கு உகந்ததாகும். இவ்வெதிர்மனுதாரர்கள் தரப்பில் தாமாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர்த்து ஏனையவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த இவ்வழக்கில் அசல் உயில் ஆவணம் குறித்து எந்த தகவலையும் சொல்லவில்லை, அவரது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் 17வது வரியில் "உயிலின் அசல் எங்ககுடைய தந்தை செல்வதத்தின் சகோதரி எடுத்து சென்றுவிட்டார்" என முதல் முதலாக குறிப்பிட்டுள்ளார். வழக்கில் சொல்லாத சங்கதி குறித்து இடைமனுவில் மனுதாரர் தரப்பில் பரிகாரம் காண இயலாது. மேலும் இவ்வெதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது அசல் உயில் ஆவணத்தை குறித்து கேள்வி கேட்டதினால் அதனை அக்குறையினை நிவர்த்தி செய்யும்பொருட்டு இல்லாத உயில் ஆவணத்தை வரவைப்பதாக மனு செய்து சட்டப்பரிகாரம் தேட முயற்ச்சிக்கிறார். அசல் உயில் ஆவணம் இம்மனுவில் சொல்வது போன்று அவரின் அத்தை சாந்தியிடம் இருக்குமேயானால் அவ்விவரத்தை வழக்கில் சொல்லி இருக்கலாம். அசல் உயில் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத பட்சத்தில் வழக்கு நிலைக்காது என்பதற்காக தவறான சங்கதிகளின் அடிப்படையில் வழக்கு விசாரணையை காலம் தாழ்த்த வேண்டும்மென்ற உள்நோக்கத்திலும், இவ்வெதிர்மனுதாரர்களுக்கு மன உளைச்சலையும், தொல்லையும் கொடுக்கவேண்டுமென்ற உள்நோக்கத்திலும் இம்மனு பெயர் அளவிற்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவிற்கு முகந்திரம் ஏதும் கிடையாது. எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

5. <u>**தீர்வு:—**</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கின் வாதிகள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 03.06.1996 தேதியிட்ட அசல் உயில் ஆவணம் தங்களது தகப்பனாரின் சகோதரி சாந்தி என்பவரிடம் உள்ளது. மேற்படி உயில் மூலம் எங்களது தாத்தா பலராம முதலியார் வழக்கு சொத்தை எங்களுக்கு எழுதிவைத்துவிட்டார். மேற்படி உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சாட்சியம் அளிக்க சாந்தி என்பவருக்கு உத்தரவிடவேண்டும் என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் உயில் ஆவணம் குறித்து எந்த தகவலும் சொல்லவில்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2வது பத்தியில் உயிலின் அசல் எங்களுடைய தந்தை செல்வத்தின் சகோதரி எடுத்து சென்றுவிட்டார் என முதன் முதலாக குறிப்பிட்டுள்ளார். வழக்குரையில் சொல்லப்படாத சங்கதி குறித்து இந்த இடைமனு மூலம் பரிகாரம் கேட்க முடியாது. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது கேட்கப்பட்டதால் அந்த குறைகளை நிவர்த்தி செய்ய இல்லாத உயில் ஆவணத்தை வரவைப்பதாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் உயில் ஆவணம் மனுதாரரின் அத்தை சாந்தியிடம் இருக்குமானால் அந்த விவரத்தை வழக்குரையில் சொல்லியிருக்கலாம். அசல் உயில் தாக்கல் செய்யாத பட்சத்தில் வழக்கு நிலைக்காது என்பதற்காக தவறான விவரம் கூறி வழக்கை காலம் கடத்த வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது மனுதாரர்கள் தரப்பில், உயிலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்குரையின் 3வது பத்தியில் செல்வத்தின் சகோதரி உயிலை எடுத்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி அசல் உயில் வாதிகளின் அத்தை சாந்தி என்பரிடம் உள்ளது. அதனை

இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அது குறித்து சாட்சியம் அளிக்க உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கவேண்டி வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யும்போது, அசல் உயில் ஆவணம் குறித்து வழக்குரையில் விவரம் சொல்லப்படவில்லை. வா.சா.1 முதன்மை வாக்குமூலத்தில் புதியதாக விவரம் சொல்லப்பட்டுள்ளது. வழக்கை காலம் கடத்தவேண்டு தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. வாதிகள் தரப்பில், வா.சா.1 சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆக உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளின் வழக்குரையின் 3வது பத்தியில் தங்களது தகப்பனார் செல்வத்தின் சகோதரி அசல் உயிலை எடுத்து சென்றுவிட்டதாக போனாவினால் எழுதப்பட்டுள்ளது. அசல் உயிலை இவ்வழக்கில் தாக்கல் செய்தால் இந்த வழக்கை தீர்வு காண்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.02 17:49:01 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.08.02 17:49:12 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.